மாலைமலர் புதுச்சேரி 21—2—2007

# மீன்கள் இருக்கும் இடத்தை அறிய மின்னணு தகவல் பலகை

## கடலூர் துறைமுகத்தில் அமைச்சர் பன்னீர் செல்வம் திறந்து வைத்தார்

கடலூர், பிப்.21—

மீன்கள் அதிகமாக கிடைக்கும் இடத்தை கண்டறிய கடலூர் துறை முகத்தில் மின்னணு தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளது.

### திறப்பு விழா

புதுவை பல் நோக்கு சேவா சங்கம் சார்பில் ரூ.17 லட்சம் செலவில் கடலூர் துறைமுகத்தில் மின்னணு தகவல் பலகை மற்றும் மீன்களை இறக்கவும் மீன்பிடி பொருட்களை ஏற்றவும் நடைமேடை அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்புவிழா நடைபெற்றது. விழாவுக்கு அருட்தந்தை ரட்சகர் அடிகளார் தலைமை தாங்கினார்.

விழாவில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் கலந்து கொண்டு மின்னணு தகவல் பலகையை திறந்து வைத்தார். இந்த தகவல் பலகை மூலம் மீனவர்கள் கடலில் எந்த திசைக்கு செல்வது எவ்வளவு தூரம் செல்வது, எவ்வளவு ஆழத்தில் அதிக மீன்கள் காணப்படுகிறது என்பது போன்ற தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

மேற்படி தகவல்கள் ஐதராபாத்தில் உள்ள இந்திய தேசிய பெருங்கடல் ஆராய்ச்சி தகவல் சேவை மையத்தில் இருந்து செயற்கை கோள் மூலமாக அனுப்ப படுகிறது. மேலும் இத்தகவல் பலகையில் சுனாமி எச்சரிக்கை கருவியும் பொருத்தப்பட்டுள்ளது.

### எரிபொருள் சேமிப்பு

மீனவர்கள் கடலில் மீன்கள் அதிகமாக கிடைக்கும் இடத்தை துள்ளியமாக அறிந்து கொண்டு மீன்பிடிக்க செல்வதால் எரி பொருள் மற்றும் நேரத்தை சேமிப்பதோடு அதிக அளவில் மீன்களும் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

விழாவில் எம்.எல்.ஏ.க்கள் அய்யப்பன், ரவிக்குமார், நகரசபை தலைவர் தங்கராசு, விஞ்ஞானி பாலகிருஷ்ணன் நாயர், கடலோர பாதுகாப்பு படை அதிகாரி சோமசுந்தரம், கடலூர் தீயணைப்பு படை அதிகாரி வெங்கட்ராமன் புதுவை பல் நோக்கு சமூக சேவா சங்க பொது மேலாளர் ரோக்புஷ்பராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.